பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 04 2025 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – போர்ச்சுக்கல் இடையேயான நல்லுறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக மின்னணு கண்காணிப்பு முறையை செயல்படுத்த உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- டிஜிட்டல் இந்தியா இயக்கம் காரணமாக நாட்டில் படைப்பாற்றல் பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- Monza ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<>>>>>>

இந்தியா – போர்ச்சுக்கல் இடையேயான நல்லுறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக போர்ச்சுக்கல் சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபர் திரு Marcelo Rebelo De Sousa –வுடன் இன்று Lisbon–ல் பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக அவர் கூறினார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அனைத்து அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக மின்னணு கண்காணிப்பு முறையை செயல்படுத்த உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் Kathua–வில் பாதுகாப்புப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

எல்லைப்பகுதிகளை பாதுகாப்பதில், எல்லைப்பாதுகாப்புப்படை ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

டிஜிட்டல் இந்தியா இயக்கம் காரணமாக நாட்டில் படைப்பாற்றல் பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறு கிராமங்களில் உள்ள இளையோருக்கும் உரிய வாய்ப்பினை டிஜிட்டல் இந்தியா இயக்கம் ஏற்படுத்தித் தந்துள்ளதாக கூறினார்.

மும்பையில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி, நான்காம் தேதிவரை நடைபெறவுள்ள வேவ்ஸ் உச்சிமாநாட்டில் உலகம் முழுவதிலும் இருந்து முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>>

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப்பணியாளர்களுக்கு இந்நாளில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு நட்டா கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மீனாட்சி மகளிர் கல்லூரியின் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்களை பெல் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவாகும் ஒப்புகை சீட்டுகளை முழுமையாக எண்ண தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தலைமை நீதிபதி திரு சஞ்சய் கண்ணா, நீதிபதிகள் திரு சஞ்சய் குமார், திரு விஸ்வநாதன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இதுதொடர்பாக, தில்லி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிட விரும்பவில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வரும் 25-ஆம் தேதிக்குள் தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

1 8 0 0 1 - 1 7 8 0 0 என்ற எண்ணிலும், நமோ செயலியிலும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மாதத்திற்கான நிகழ்ச்சி வரும் 27-ஆம் தேதி ஒலிபரப்பாகவுள்ளது.

<<<<<>>>>>>

இந்தியா – நேபாளம் இடையே நீதித்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று புதுதில்லியில் கையெழுத்தானது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா, நேபாள உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு Prakash Man Singh முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையம், நுகர்வோருக்கு நேரடியாக எந்த தகவல்களையும் வழங்குவதில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தொலைத்தொடர்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் பெயரை பயன்படுத்தி சிலர் தவறான செயல்களில் ஈடுபடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்படும் என்று தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் மூலம் வழங்கப்படுவதாக வெளியாகும் தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற தகவல் பெறப்பட்டால் அது குறித்து தொலைத்தொடர்புத்துறைக்கு தெரிவிக்குமாறு அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

போதைப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து இளையோரிடையே கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பஞ்சாப் ஆளுநர் திரு Gulab Chand Katari வலியுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள் தீமை தொடர்பான விழிப்புணர்வு பாத யாத்திரையின் ஒரு பகுதியாக, அமிர்தசரஸ் சென்ற அவர், செய்தியாளர்களிடம் பேசினார்.

பஞ்சாபில் மட்டும் 22 லட்சம் பேர் போதைப்பொருள் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்பிற்காக அனைத்துத்தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் பஞ்சாப் ஆளுநர் திரு Gulab Chand Katari கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

இந்தியா வலிமைமிக்க நாடாக உருவாகி வருவதாக உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

கோரக்பூரில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதாரம் விரைவாக வளர்ச்சி கண்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

உலகிற்கே வழிகாட்டும் சக்தியாக இந்தியா திகழ்கிறது என்றும் திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சியில் அமைப்பு ரீதியாக பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கட்சியின் மாவட்ட தலைவருக்கான பதவி இடங்களில் மூன்றில் இரண்டு பங்கு நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

கர்நாடகாவில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மத ரீதியலான இடஒதுக்கீடு போன்றவற்றை எதிர்த்து பிஜேபி சார்பில் ஒருமாத கால மக்கள் பேரணி நடைபெறவுள்ளதாக அம்மாநில பிஜேபி தலைவர் திரு B Y விஜயேந்திரா கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பேரணி மைசூரில் இருந்து தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

நான்கு கட்டங்களாக இந்த பேரணி நடைபெறும் என்றும் திரு விஜயேந்திரா கூறினார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மூன்று மசோதாக்களுக்கு துணைநிலை ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி மசோதா உட்பட மூன்று மசோதாக்கள் இதில் அடங்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத், ராஜஸ்தான் மற்றும் தில்லியில் அனல் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஹரியானா மற்றும் பஞ்சாபில் இதே நிலை நீடிக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று உருவாகியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

Monza ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 6-2, என்ற செட் கணக்கில், இத்தாலியின் Federico Lannaccone –ஐ வென்றார்.

--------

Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Payas Jain - Yashaswini Ghorpade இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------------

அர்ஜென்டினாவில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இரண்டு தங்கம் உட்பட 4 பதக்கங்களுடன் இந்தியா, சீனாவுடன் இணைந்து முதலிடத்தில் உள்ளது.

<<<<<END>>>>>>